செ. கு. எண்: 323 நாள் :10.12.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 10.12.2013

29.11.2013 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், சிறுமுகை வனச்சரகம், ஓடந்துறை காப்புக்காடு அருகே ஊமப்பாளையம் பகுதியைச் சேர்ந்த திரு. மனோகரன் என்பவரின் மனைவி எம்.ராணி;

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், அய்யூர் காப்புக் காடு அருகே மூக்கன்கரை கிராமத்தைச் சேர்ந்த திரு. ஐயப்பா என்பவரின் மகன் நரசிம்மப்பா;

--ஆகியோர் காட்டு யானைகள் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

20.11.2013 அன்று திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், அடுக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துசாமி என்பவரின் மகன் சிவசாமி, காட்டெருமை தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த ராணி, நரசிம்மப்பா, மற்றும் காட்டெருமை தாக்கியதில் அகால மரணமடைந்த சிவசாமி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9